இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *9472/2010*

எ. சுப்பிரமணியன் மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

ஆர். பன்னீர்செல்வம் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்:

இரண்டாம் மேல்முறையீடு எண் *39/2009*-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் *28.4.2009*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் உயர் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றம் தீர்ப்பாணையிட்டிருந்த உரிமை வழக்கான மு.வ. எண் *188/2002*-இல் *6.2.2004*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையை மீட்டளித்து, மே.வ. எண் *172/2005*-இல் *26.11.2008*-ஆம் தேதியிடப்பட்ட முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவுசெய்து, வாதியின் இரண்டாவது மேல்முறையீட்டை அனுமதித்திருந்த அத்தீர்ப்புரையை எதிர்த்து உரிமையியல் வழக்கின் பிரதிவாதிகளால் இம்மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தரப்பினர்கள் முதலேற்பு வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக குறிப்பிடப்படுதல்வேண்டும். இம்மேல்முறையீடு எழுவதற்கு வழிகோலிய வழக்கின் சுருக்கமான பொருண்மைகளாவன:

இம்மேல்முறையீட்டின் எதிர்மேல்முறையீட்டாளரான வாதி ஆர். பன்னீர்செல்வம், வழக்குச் சொத்தின் மீது வாதியின் அமைதியான சுவாதீனம் மற்றும் அனுபோகத்தை

இடையூறு செய்வதிலிருந்து பிரதிவாதிகளைத் தடுக்கின்ற நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக வேண்டுரைத்து நாமக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ. எண் 188/2002-ஐ தாக்கல் செய்தார். வழக்குச் சொத்து, காலப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 172/1-இல் அடங்கியுள்ள 1777-1/2 ச.அ. அளவு கொண்டதாகும். இவ்வுரிமை வழக்கில் வாதியின் வழக்காவது, வழக்குச் சொத்து முதலில் ஸ்ரீலங்காவிற்கு பண்ணைக் கூலியாளாகச் சென்று, ஸ்ரீலங்காவில் இறந்துபோன தலாமா நாயுடுவின் மகனான தாசி நாயுடு என்பவருக்குச் சொந்தமானதாகும். தாசி நாயுடுவின் மகனான கிருஷ்ணசாமி நாயுடு 1981-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து, வழக்குச் சொத்தையும், மற்ற சொத்துகளையும் கனி சாஉறிப் என்பவரிடம் ஒப்படைத்தார். இவர் சொத்துகளை நிர்வகித்து, அனுபவித்து வந்தார் என்பதாகும்.

3. வாதி, தாசி நாயுடுவின் வழித்தோன்றல்களிடமிருந்து ஒரு செல்லத்தக்க மறுபயனுக்காக 16.7.2001 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் வழக்குச் சொத்தை வாங்கியுள்ளதாக உரிமை கோரினார். மேலும், வாதியின் வழக்காவது, முதல் பிரதிவாதி, முன்னாள் இராணுவப் படைவீரர் ஆவார். மேலும், முதல் பிரதிவாதியின் மருமகனான இரண்டாம் பிரதிவாதி, காவல்துறையில் காவலராக பணிபுரிந்துகொண்டு வழக்குச் சொத்தின்மீதான வாதியின் அமைதியான சுவாதீனத்தையும், அனுபோகத்தையும் இடையூறு செய்ய முயன்றனர். எனவே, இந்த உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாசி நாயுடுவின் சட்டப்படியான வாரிசுகளால் நிறைவேற்றப்பட்ட 22.5.2001-ஆம் தேதியிடப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணம், 16.7.2001-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணம், தாசி நாயுடுவிற்கு ஆதரவான 14.3.1946-ஆம்

தேதியிடப்பட்ட கிரைய ஆவணம், 27.2.2001-ஆம் தேதியிடப்பட்ட வீட்டுவரி ரசீது ஆகியவை வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும்.

4. வாதியின் கோரிக்கையை மறுத்து, 1-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரைத் தாக்கல் செய்தார், வழக்குச் சொத்து தாசி நாயுடுவிற்குச் சொந்தமானது என்பதை பிரதிவாதி ஒப்புக்கொண்டார். 16.7.2001-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணமே பொய்யாக புனையப்பட்ட ஒன்றாகும் என பிரதிவாதி வாதிட்டார். கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டவாறு, தாசி நாயுடுவின் வழித்தோன்றல்களாக அழைக்கப்படும் சட்டப்படியான வாரிசுகள் கற்பனையாக சித்தரிக்கப்பட்டவர்கள், மேலும், மேற்படி தாசி நாயுடுவின் சட்டப்படி உண்மையான வாரிசுகள் அல்லர். வழக்குச் சொத்தின் உரிமை மூலமே பிரச்சினைக்குரியதாக உள்ளது, வாதி, கனி சாஉறிப்புடன் சேர்ந்துகொண்டு இரண்டு தனி பகரதிகார ஆவணங்களைப் புனைந்துள்ளார், மேலும், வாதி மேற்படி ஆவணங்களுடன் உ.வி.மு.ச., கட்டளை VII விதி 14-இன் கீழ் உரிமை வழக்கு தாக்கல் செய்திருந்தார். தாசி நாயுடுவின் மகனான சஞ்சீவி நாயுடு, வழக்குச் சொத்தையும், மற்ற சொத்துகளையும், பி. ரங்கராஜு நாயுடு என்பவரிடம் ஒரு பதிவு செய்யப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணத்தின் வாயிலாக ஒப்படைத்தப் பின்னர், அவர், அவரது ஒரேயொரு சட்டப்படி வாரிசான திருமதி அர்ஜுனா தேவியை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், இவர் தனது மகள்களான நாளந்தா, இந்திரா மற்றும் குணபாரதி ஆகியோரை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கோரிக்கை வைத்திருந்தனர். 1-ஆம் பிரதிவாதி, கனி சாஉறிப்பின் உடைமையை எதிர்த்து அவருக்கு எதிராக அவருடைய மூன்று மகள்களின் சார்பாக ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார், அவ்வுரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மே.வ. எண் 297/1994 என்ற மேல்முறையீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

5. வாதி, வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டார். பிரதிவாதிகள், பி.சா.1 முதல் பி.சா.6-ஆக விசாரிக்கப்பட்டனர். வாதி, ஏழு சான்றாவணங்களைத் தாக்கல் செய்தார். விசாரணை நீதிமன்றம் பின்வரும் மூன்று எழுவினாக்களை வனைந்தது:

"அ) உரிமை வழக்கிலுள்ள வாதியால் கோரப்பட்ட நிரந்தர உறுத்துக்கட்டளை அவருக்கு கிடைக்கத்தக்கதா?

ஆ) வாதி வழக்குச் சொத்தின் உண்மையான உரிமையாளர் அல்லர் என்ற பிரதிவாதிகளின் கூற்று சரியா?

இ) வாதிக்குள்ள கிடைக்கத்தக்க மற்ற பரிகாரங்கள் யாவை?"

6. 22.05.2001-ஆம் தேதியிடப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணம், ஸ்ரீலங்காவில் தயாரிக்கப்பட்டு, நாமக்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது. சான்றாவணங்கள், வா.சா.1 மற்றும் வா.சா.2 வாதியின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். வாதி, சொத்தில் உரிமை கொண்டுள்ளார், வாதியின் சுவாதீனமும் மெய்பிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது. விசாரணை நீதிமன்றம் உரிமை வழக்கைத் தீர்ப்பாணையிட்டது.

7. பிரதிவாதிகள், நாமக்கல் சார்பு நீதிமன்றம் முன்பாக மே.வ. எண் 172/2005 என்ற ஒரு மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்களான பகராள் செயலுரிமை ஆவணங்களின் செல்லுந்தன்மையை ஏற்றுக்கொண்டு, சான்றாவணம் வா.சா.ஆ.1 சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளால் சூழப்பட்டுள்ளதாகக் கருத்துரைத்தது. எனினும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், வெளிநாட்டில் எழுதப்பட்ட பகர ஆவணம் பதிவு

செய்யப்படவேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்தது. மேலும், சான்றாவணமான வா.சா.ஆ.1 பகராள் செயலுரிமை ஆவணத்தின் நிறைவேற்றமும், நம்பத்தகுந்தநிலையும் மெய்ப்பிக்கப்பட்டிருக்காததால் சான்றாவணமான வா.சா.ஆ.2 கிரைய ஆவணமும் தீங்குதரத்தக்கவகையில் பாதிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வந்தது. எனவே, வாதி வழக்குச் சொத்தின் மீது தனது உரிமைமூலத்தை நிலைநாட்டத் தவறிவிட்டார். மேலும், ஒன்றாம் பிரதிவாதி அதே சொத்துக்காக மு.வ. எண் 524/1987-ஐ தாக்கல் செய்திருந்தார், அதில் 1-ஆம் பிரதிவாதி, தனக்காகவும், தனது மூன்று மகள்களுக்காகவும் சொத்தின் உடைமை மற்றும் விளம்புகை கோரியிருந்தார், வழக்குச் சொத்து 1-ஆம் பிரதிவாதியின் மூன்று மகள்களுக்குரித்தானது என்றும், அவர்களிடம் சுவாதீனம் உள்ளது என்றும் பிரதிவாதியால் மெய்ப்பிக்க இயலவில்லை என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. வாதி தனது உரிமைமூலத்தை மெய்ப்பிக்கத் தவறிவிட்டார் என்ற காரணத்தின்பேரில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்முறையீட்டை அனுமதித்து, தீர்ப்பாணையை நீக்கறவு செய்தது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையினால் மனக்குறையுற்று, வாதி இரண்டாம் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

8. உயர் நீதிமன்றம் அதன் 28.04.2009-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் வாதியின் சார்பாக உறுத்துக்கட்டளை வழங்கி, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை உறுதிசெய்து, மூன்று சாரமான சட்ட எழுவினாக்களை முடிவுசெய்ததன் வாயிலாக இரண்டாவது மேல்முறையீட்டை அனுமதித்தது. பிரதிவாதி, வழக்குச் சொத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கும், விளம்புகை செய்வதற்குமான முதலேற்பு வழக்கு எண் 524/1987-ஐ தாக்கல் செய்திருந்தார், அது, விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக, அந்த மே.வ. எண் 297/1994-ம் தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளதால், பிரதிவாதி வழக்குச் சொத்தின் உரிமைமூலத்திலோ, உடைமையிலோ ஒருபோதும் இருந்ததில்லை என்று முந்தைய நடவடிக்கைகளில் இறுதி முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாலும், வாதியின் உடைமை, பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும் வாதியின் உரிமை வழக்கு தீர்ப்பாணையிடப்படுவதற்குரியதாகும் என உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், சான்றாவணங்களான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2-இன் செல்லுந்தன்மையை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது என்று உயர் நீதிமன்றம் கருதியது. உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டை அனுமதித்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது மனக்குறையுற்று, பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டுடன் முன்வந்துள்ளனர்.

9. மேல்முறையீட்டாளர் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி கே. அபிராமி முன்னிலையானார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் முன்னிலையானார்.

10. வாதி 16.07.2001-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்திற்குரிய உரிமையைக் கோரியுள்ளார். அக்கிரைய ஆவணம் தாசி நாயுடுவின் வாரிசுகளால் முறையான பகராள் செயலுரிமை ஆவணப்படி நிறைவேற்றப்பட்டிருக்காததால் செல்லத்தகுந்ததாக இல்லை. ஆகவே, வாதியின் உரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும் என மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார். வாதி தன்னுடைய வழக்கிலுள்ள நம்பிக்கையின்பேரில் அவ்வுரிமை வழக்கில் வெற்றியடையலாம் என்றும், வாதி, பிரதிவாதிகளின் வழக்கில் உள்ள பலவீனத்தை அனுகூலமாக எடுத்துக்கொள்ளமுடியாது என்றும் பணிந்துரைக்கப்படுகிறது. பிரதிவாதிகள், வாதியின் உரிமை வழக்கில்

தங்களின் உரிமைமூலத்தையும், உடைமையும் மெய்ப்பிக்கத் தவறியிருந்தாலுங்கூட, பிரதிவாதிகள் தங்களின் உரிமைமூலத்தையும், உடைமையையும் மெய்ப்பிக்கத் தவறிவிட்டனர் என்ற சங்கதியின்பேரில் மட்டுமே தீர்ப்பாணையிட்டிருக்கக்கூடாது.

11. பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் விசாரணை நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் பரிசீலிக்கப்படவில்லையென்றும் மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். மேல்முறையீட்டாளர்களான கற்றறிந்த வழக்குரைஞர், **நகர் பாலிகா, ஜிந்த் -எதிர்- ஜகத் சிங், வழக்குரைஞர்,** *(1995) 3* **எஸ்.சி.சி.** *426*; **யமுனா நகர் இம்புரூவ்மெண்ட் டிரஸ்ட் -எதிர்- காரியட்டி லால்,** *(2005) 10* **எஸ்.சி.சி.** *30* **மற்றும் ஜக்தீஸ் பிரசாத் படேல் (இறந்துவிட்டார்) சட்டப்படியான பிரதிநிதிகள் மூலமாக மற்றும் ஒருவர் -எதிர்- சிவ்நாத் மற்றும் பலர்,** *(2019) 6* **எஸ்.சி.சி.** *82* ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் மீது சார்ந்துநின்றார்.

12. எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர், மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞரின் வாதத்தை மறுத்து, வாதி அவரது உடைமையை வெற்றிகரமாக மெய்பித்துள்ளார் என்றும், இதுவும், பிரதிவாதியால் அவரது விவர உரையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், உறுத்துக்கட்டளைக்கான உரிமை வழக்கு விசாரணை நீதிமன்றத்தால் சரியாக தீர்ப்பாணையிடப்பட்டது என்றும் வாதுரைத்துள்ளார். முக்கியமாக, வாதியும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் தனது உரிமைமூலத்தை வெற்றிகரமாக மெய்ப்பித்துள்ளார் என்று வாதிடப்பட்டுள்ளது. தாசி நாயுடுவின் சட்டப்படியான வாரிசுகளால் நிறைவேற்றப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணத்தின் அடிப்படையில் ஒரு

பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் சொத்து வாங்கப்பட்டது. பகராள் செயலுரிமை ஆவணம் ஸ்ரீலங்காவில் தயாரிக்கப்பட்டு, நாமக்கல் சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளதால், பகராள் செயலுரிமை ஆவணம் முறையாக நிறைவேற்றப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை என்று தீர்மானித்ததில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது. வாதி, பழைய கட்டமைப்பை இடித்துவிட்டார் என்பது பதிவில் உள்ள சான்றிலிருந்து மெய்ப்பிக்கப்பட்டிருப்பதால், வாதியின் உடைமை பிரதிவாதியால் மறுக்கப்படமுடியாது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி சொத்தின் மேலாளரான கனி சாஉறிப்பிற்கு எதிராக வழக்குச் சொத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கும், விளம்புகைக்குமான உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அவ்வுரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால், வாதியின் உரிமை வழக்கை எதிர்க்க பிரதிவாதிக்கு உரிமை இல்லை.

13. நாங்கள் தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைப் பரிசீலித்து பதிவாவணங்களைப் பார்வையிட்டுள்ளோம்.

14. வாதி, தனது வழக்குரையில் உரிமைமூலத்தையும், உடைமையையும் கோரியதுடன் பிரதிவாதிகள், வழக்குச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனத்தையும், அனுபோகத்தையும் இடையூறு செய்வதிலிருந்து தடுக்கவும் கோரினார். உரிமை வழக்கில் வாதி பின்வரும் பரிகாரங்களை வேண்டுரைத்துள்ளார்:

> "அ) வழக்குச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனத்தையும், அனுபோகத்தையும் எம்முறையிலாவது இடையூறு செய்வதிலிருந்து பிரதிவாதிகளையும், அவர்களது ஆட்களையும் தடுக்கின்ற நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும்;

ஆ) மாண்புமிகு நீதிமன்றம் வழக்கின் சூழ்நிலைகளுக்கு உகந்தவகையில் கருதுகின்றவாறான மேலும் வேறு பரிகாரம் அல்லது பரிகாரங்களை வழங்குவதற்காகவும்;

இ) பிரதிவாதிகளுக்கு வழக்கின் செலவுத்தொகையை தீர்வளித்து நீதியை நிலைநாட்டவும்" ஆகும்.

15. வாதி, சொத்துடன் உடைமையின் மீதான தனது உரிமையை மெய்ப்பித்துள்ளதாகவும், அவர் உறுத்துக்கட்டளை தீர்ப்பாணைக்குரியவர் என்றும் விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது. முந்தைய உரிமை வழக்கான மு.வ. எண் 524/1987 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வுரிமை வழக்கு விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடான மே.வ. எண் 297/1994-ம் தள்ளுபடி செய்யப்பட்டது என அனைத்து மூன்று நீதிமன்றங்களும் குறிப்பிட்டுள்ளன. இவற்றின் தீர்ப்புரைகள் வாதியால் விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக கொண்டுவரப்பட்டன. மு.வ. எண் 524/1987-இல் 23.11.1992-ஆம் தேதியிடப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் நகல், பிற்சேர்க்கை பி.5-ஆக பதிவில் கொண்டுவரப்பட்டுள்ளது. உரிமை வழக்கு, 1-ஆம் பிரதிவாதியால் அவரது மூன்று இளவர் மகள்களோடு சேர்ந்து தாக்கல் செய்யப்பட்டது, அவர், மகள்களின் தந்தையாகவும், காப்பாளராகவும், வழக்கு துணைவராகவும் இருப்பதால் மு.வ. எண் 524/1987-இன் வாதி திரு. பி. ரங்கராஜு நாயுடு என்பவரின் மூலமாக வழக்குச் சொத்தின் மீதான உரிமைமூலத்தைக் கோரினார். மேலாளரான கனி சாஉறிப் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டார். மேலும், உரிமை வழக்கு விளம்புகைக்காகவும், உடைமைக்காகவும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டது.

சொத்து தாசி நாயுடுவுக்குச் சொந்தமானது என்றும், இவரது மகன் கிருஷ்ணசாமி நாயுடு இந்தியாவுக்கு வந்து வழக்குச் சொத்தை நிருவகிப்பதற்காக பிரதிவாதியின் சார்பாக பகராள் செயலுரிமை ஆவணத்தை நிறைவேற்றினார் என்பதும், அப்போதிலிருந்து பிரதிவாதி உடைமையிலும், அதனைப் பயன்படுத்துபவராகவும் இருந்துவந்தார் என்பதுமான வாதத்தை பிரதிவாதி தொடுத்து உரிமை வழக்கை எதிர்த்தார். மேற்படி உரிமை வழக்கில் வாதியான சுப்பிரமணியனால், பிரதிவாதியின் உடைமை ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்வரும் தீர்ப்புரையில் 11-ஆவது பத்தியில் விசாரணை நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டதாவது:

> "11. ....இவ்வுரிமை வழக்கில் பிரதிவாதி வழக்குச் சொத்துகளின் உடைமையில் உள்ளார் என்பது வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பிரதிவாதி வழக்குச் சொத்துகளின் உடைமையில் உள்ளார் என்று வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளதான அச்சூழ்நிலைகளின் கீழ், பிரதிவாதி சார்பாக கிருஷ்ணசாமியால் நிறைவேற்றப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணத்தை பிரதிவாதி முன்னிலைப்படுத்தியிருக்கவில்லையென்றபோதிலும், பி.சா.1-இன் சான்றுரையில் பிரதிவாதி கிருஷ்ணசாமியின் பகர அதிகாரத்தில் உள்ளார் என்பது ஏற்கத்தக்க ஒன்று என்று கோரியுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. பி.சா.2-இன் சான்றுரையிலிருந்து சஞ்சீவி நாயுடு, நல்லு நாயுடு, கிருஷ்ணசாமி நாயுடு ஆகியோரை தாசி நாயுடு தனது சட்டப்படியான வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று

தீர்மானிக்கப்பட்டுள்ளது..... பிரதிவாதி, கிருஷ்ணசாமியின் பகர அதிகார முகவராக அவரது தகுதியில் வழக்குச் சொத்தின் உடைமையிலிருந்துகொண்டு நிர்வகித்து வருகிறார் என்றும், பிரதிவாதி வழக்குச் சொத்தில் வாடகைதாரர் அல்லர் என்றும், அதன்படி இரண்டு மற்றும் ஐந்தாவது எழுவினாக்கள் உரியவாறு பதிலளிக்கப்படுகின்றன என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது...."

16. சுப்பிரமணியனால் தாக்கல் செய்யப்பட்ட உடைமைக்கும், விளம்புகைக்குமான உரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கெதிராக மே.வ. எண் 297/1994 தாக்கல் செய்யப்பட்டு, அது, 8.9.1995 அன்று சேலம் மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

17. உயர் நீதிமன்றம் அதனுடைய தீர்ப்புரையில் முந்தைய வழக்கை சரியாகக் குறிப்பிட்டு, சுப்பிரமணியன் மற்றும் அவரது மூன்று மகள்களால் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய வழக்கின் காண்முடிவுகளின்படி, பிரதிவாதிகள் வழக்குச் சொத்தின் உடைமையில் இல்லை என்று தீர்மானிப்பது போதுமானது என்று முடிவு செய்துள்ளது. வாதியின் உடைமை, உரிமை வழக்கில் பிரதிவாதியினாலேயே செய்யப்பட்ட ஏற்புரையின் அடிப்படையிலானது என்று உயர் நீதிமன்றம் சரியாகவே கருத்துரைத்துள்ளது. உயர் நீதிமன்றம் 24-ஆம் பத்தியில் தீர்மானித்துள்ளதாவது:

"24. ....வாதியின் உடைமை என்பது பிரதிவாதிகளாலேயே செய்யப்பட்ட ஏற்புரைகளின் அடிப்படையிலும், மேலும், ஒன்றாம் பிரதிவாதி தொடங்கிய தனது இறுதிப் போராட்டத்தைச்

சந்தித்த முந்தைய வழக்கு நடவடிக்கைகளின் பொருண்மைத் தொகுதியின் அடிப்படையிலுமானது."

18. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் செய்யப்பட்ட வாதம் யாதெனில், இவ்வுரிமை வழக்கில் வாதி தனது உரிமைமூலத்தையும், உடைமையையும் கோரியுள்ளார். உயர் நீதிமன்றம் வாதியின் உரிமைமூல பிரச்சினைக்குள் செல்லாமலும், வாதியின் உரிமைமூலத்தை தீர்மானிக்காமலும் பிழைபுரிந்துள்ளதால் உரிமை வழக்கை தீர்ப்பாணையிட்டிருக்கக்கூடாது என்பதாகும். மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் **நகர் பாலிகா, ஜிந்த் -எதிர்- ஜகத் சிங், வழக்குரைஞர்,** *(1995)* **3 எஸ்.சி.சி.** *426* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது சார்ந்துநின்றது. மேற்படி வழக்கில் உரிமை வழக்கு உறுத்துக்கட்டளைக்காக எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டது, இதில் எதிர்மேல்முறையீட்டாளர் பிரச்சினைக்குரிய நிலத்தின் உரிமையாளராகவும் இருந்ததில்லை, உடைமையிலும் இருந்ததில்லை என்ற காரணத்தின்பேரில் நகராட்சிக் குழுவால் எதிர்க்கப்பட்டது. விசாரணை நீதிமன்றம் உரிமை வழக்கை தள்ளுபடி செய்தது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் உரிமை வழக்கை தீர்ப்பாணையிட்டிருந்தது, மேலும், இரண்டாவது மேல்முறையீடு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. நகர் பாலிகா, இந்த நீதிமன்றம் முன்பாக மேல்முறையீடு தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டிருக்காத கிரைய ஆவணம் மூலமாக ஈட்டப்பெற்ற உரிமைமூலம் இவ்வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக இருந்தது, அது, நகராட்சிக் குழுவால் ஒருபோதும் எதிர்த்துரைக்கப்படவில்லை என்ற அனுமானத்தின்பேரில் இந்த நீதிமன்றம் மேல்நடத்தியது என்ற வாதம் நகர் பாலிகாவால் இந்நீதிமன்றம் முன்பாக எழுப்பப்பட்டது. இந்நீதிமன்றம் 6-ஆம் பத்தியில்

முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு மாறாக கருத்து தெரிவித்து பின்வருமாறு தீர்மானித்துள்ளது:

"6. எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்குரைஞர், நகராட்சிக் குழுவால் அதனுடைய எதிர்வழக்குரையில், எதிர்மேல்முறையீட்டாளரின் உரிமைமூலத்தையும், உடைமையையும் குறித்த அத்தகைய தெளிவான மறுப்பு எவ்வாறு வெளிப்படையாக உள்ளது என்பதை விளக்க இயலவில்லை, மேல்முறையீட்டு நீதிமன்றம் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டிருக்காத கிரைய ஆவணம் மூலமாக ஈட்டப்பெற்ற உரிமைமூலம் இவ்வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக இருந்தது, அது, நகராட்சிக் குழுவால் ஒருபோதும் எதிர்த்துரைக்கப்படவில்லை என்ற அனுமானத்தின்பேரில் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்நடத்தியது. எங்களின் கூற்றுப்படி, எதிர்மேல்முறையீட்டாளர், நீதிமன்றம் முன்பாக ஒருபோதும் முன்னிலைப்படுத்தப்படாத பிரச்சினைக்குரிய கிரைய ஆவணம் மூலமாக விலைக்கு வாங்கப்பட்டதாகச் சொல்லப்படும் தேதிக்குப்பிறகு எதிர்மேல்முறையீட்டாளரின் உடைமை தொடர்புடைய சான்றினைப் பரிசீலிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் முற்பட்டபோது, மேல்முறையீட்டு நீதிமன்றம் பெரும்பிழைபுரிந்துவிட்டது என்பதாகும். இது உரிமைமூலத்தின் அடிப்படையிலான ஓர் உரிமை வழக்கில்

எதிர்மேல்முறையீட்டாளர் வழக்குச் சொத்திற்குரிய தனது உரிமைமூலத்தை மெய்ப்பித்திருந்தாரா? என்ற முக்கியமான பிரச்சினையில் அதனுடைய சிந்தையை ஒருபோதும் செலுத்தியிருக்கவில்லை. பிரச்சினைக்குரிய சொத்தில் அவரது உரிமைமூலத்தை நிரூபிக்கும் பொறுப்பு மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர் மீதிருந்தது என்பது மறுத்துரைக்கப்பட முடியாது. மேலும். மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர் அட்டவணையிலுள்ள உடன்-பங்குதாரர்களில் ஒருவரின் பங்கை கோரிவந்தார். ஆனால், எந்த உடன்-பங்குதாரரும் கூட்டுச் சொத்தின் குறிப்பிட்ட பகுதிக்குரிய உரிமைமூலத்தை மாற்றஞ்செய்ய இயலாது என்று மேல்முறையீட்டாளரின் சார்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்பாக சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரிகிறது. எனினும், வழக்கின் அடிப்படையில் பிரச்சினைகளைப் பரிசீலிக்கத் தவறிவிட்டதால் மேல்முறையீட்டின் நீதிமன்றம், 1974-75-ஆம் ஆண்டிற்கான ஜமாபந்தி மற்றும் 1977-79-ஆம் ஆண்டிற்குரிய கஸ்ரா கிர்த்வாரி போன்ற 1974-75-ஆம் ஆண்டிலிருந்து உள்ள வருவாய் ஆவணங்களை மட்டுமே பரிசீலிக்க முற்பட்டது."

19. உரிமை வழக்கு, குறித்தவகை பரிகாரச் சட்டம் 1963, பிரிவு 6-இன் கீழானதாகக் கருதப்படவேண்டும் என்று உரிமை வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளரால் ஒரு நிலைப்பாடு எடுக்கப்பட்டது. இந்நீதிமன்றம் மேற்படி வாதத்தை நிராகரித்தது.

பத்தி 9-இல், பிரிவு 6-இன் அடிப்படையிலான எதிர்மேல்முறையீட்டாளரின் வாதம் பின்வருமாறு கருத்துரைத்ததன் மூலம் இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது:

> "9. குறித்தவகை பரிகாரச் சட்டத்தின் பிரிவு 6-இன் கோட்பாட்டினை, எவ்வாறு தற்போதைய வழக்கின் பொருண்மைகளிலும், சூழ்நிலைகளிலும் பொருத்தலாம்? என்பது குறித்து மதிப்பிட நாங்கள் தவறிவிட்டோம். வாதியான எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரான நகராட்சிக் குழுவால் உடைமை நீக்கம் செய்யப்பட்டிருந்ததாக ஒருபோதும் சொல்லவில்லை. அதற்குமாறாக, அவர் பிரச்சினைக்குரிய நிலத்தின் உரிமையாளராக உரிமைகோரி அதன் உடைமையில் இருப்பதாகவும் உறுதிபட கூறினார். அவர், தனது உடைமையில் குறுக்கிடுவதிலிருந்து மேல்முறையீட்டாளரை தடுக்கின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை கோரினார். இரு தரப்பினர்களும் உரிமைமூலப் பிரச்சினை உட்பட அவரவர்களுக்குரிய உரிமை கோரிக்கைகளுக்கு ஆதரவாக சான்றுகளை முன்வைத்தனர்."

20. இவ்வழக்கில் வாதியின் உடைமை இரு முக்கிய காரணங்களின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டது. முதலாவதாக, உரிமை வழக்கின் பிரதிவாதியான சுப்பிரமணியன் சொத்தின் மேலாளரான கனி சாஉறிப்பை எதிர்த்து அதே சொத்திற்கான உடைமையை மீளப்பெறுவதற்காகவும், விளம்புகைக்காகவும் முன்னதாக ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். இது

இந்த உரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, உடைமை மீளப்பெறுகை நிராகரிக்கப்பட்டுள்ளதால், பிரதிவாதி உடைமையில் இருப்பதாக வாதுரைக்கக்கூட முடியாது. இரண்டாவதாக, பிரதிவாதியே தனது குறுக்கு விசாரணையில், வாதி, கட்டுமானத்தை வாங்கியபிறகு இடித்துவிட்டதாக ஒப்புக்கொண்டிருந்தார். உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்புரையின் 13-ஆவது பத்தியில், குறுக்கு விசாரணையின்போது பி.சா.1-இன் சான்றுரையிலிருந்து தொடர்புடைய பகுதிகளை எடுகுறிப்பிட்டுள்ளது. பி.சா.1-இன் சான்றுரையிலிருந்து மேற்கோள்காட்டியபிறகு தீர்ப்புரையின் 13-ஆவது பத்தியில் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

> "13. ...பி.சா.1 உண்மை பேசவேண்டும் என்ற பொறுப்புறுதி ஏதுமில்லாமல் அரைகுறை மனதுடன் பாதி உண்மையை ஒப்புக்கொண்டும், மீதி உண்மையை மறுக்கும் அளவுக்கு எவ்வாறு சென்றார் என்பது குறித்து, அந்த எடுகுறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை சாதாரணமாக ஆராய்வதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எப்படியாவது வழக்குப்போரில் வெற்றியடையும்பொருட்டு முந்தைய உரிமை வழக்கு, வழக்குச் சொத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கானதல்ல என்று பி.1, மு.வ. எண் 524/1987-லும் மற்றும் மே.வ. எண் 297/1994-லும் (சான்றாவணங்களான வா.சா.ஆ.3, வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7) உள்ள தீர்ப்புரைகள் மற்றும் தீப்பாணைகளுக்கு முற்றிலும் மாறாக இந்நீதிமன்றத்தின் முன்பாக வாதுரைக்குமளவிற்குச்

சென்றுவிட்டார். ஆனால், முந்தைய உரிமை வழக்கு, வழக்குச் சொத்து உட்பட மொத்த சொத்தின் உடைமையை மீளப்பெறுவதற்காகவும், விளம்புகைக்காகவும் பி.1 மற்றும் அவரது மூன்று குழந்தைகளால் தாக்கல் செய்யப்பட்டது என்பதை அந்த தீர்ப்புரைகளும், தீர்ப்பாணைகளும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. மேற்படி முந்தைய உரிமை வழக்கில் முதல் பிரதிவாதி மற்றும் அவருடைய சட்டப்படியான வாரிசுகள் தங்களுடைய முதல் வழித்தோன்றலான ரங்கராஜூலு நாயுடுவிடமிருந்து உரிமைமூலத்தைப் பெற்று பகர அதிகார ஆவணத்தின் கீழ் வழக்குச் சொத்தைப் பெற்றுக்கொண்டனர் என்றும், அவர்கள் இரு நீதிமன்றங்களிலும் தோல்வியுற்றனர் என்றும் வாதிட்டனர். அவ்வகையில், பிரதிவாதிகள் இங்குள்ள வழக்குச் சொத்தின் உடைமையில் இல்லை என்று தீர்மானிக்கும் அளவிற்கு இதுவே போதுமானதாகும்."

21. மேலும், சொத்தில் அத்துமீறி நுழைந்து நிரூபிக்கப்பட்ட உடைமையில் உள்ளவருங்கூட உறுத்துக்கட்டளைப்பெற இயலுமென்பது பொதுவான சட்டக்கோட்பாடாகுமென்று உயர் நீதிமன்றம் அதன் கருத்தைக் கூறியதில் சரியே ஆகும். எனினும், வாதியே உரிமைமூல பிரச்சினைக் குறித்து வாதுரையில் விரிவாகக்கூறி, உறுத்துக்கட்டளைப் பரிகாரத்துடன் உரிமைமூல விளம்புக்கைகாக வேண்டுரைக்க தவறுவாரேயானால் அவ்விடயம் வேறுவிதமாக இருக்கும். முந்தைய வழக்கில் பி.சா.1 பரிகாரமேதும் பெறுவதற்கு தவறிவிட்டார் என்ற வெளிப்படையான சங்கதியின் காரணமாக உரிமைமூல பிரச்சினைக் குறித்து வாதி எதுவும்

கூறியிருக்கவில்லை என்பதை வழக்குரையினைச் சாதாரணமாக ஆராய்வதில் தெளிவாக தெரிகிறது என்று உயர் நீதிமன்றம் சரியாக கருத்துரைத்துள்ளது. வாதி விளம்புகைக்காக வேண்டுரைக்காமல் வெறும் உறுத்துக்கட்டளையைக் கோரமுடியாது என்ற கோட்பாடு தற்போதைய வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தத்தக்கதல்ல என்று உயர் நீதிமன்றம் சரியாகக் கருத்துரைத்துள்ளது.

22. நாம், **நாயர் சர்வீஸ் சொசைட்டி லிமிடெட் -எதிர்- கே.சி. அலெக்சாண்டர் மற்றும் பலர், ஏ.ஐ.ஆர். 1968 எஸ்.சி. 1165** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையையும் குறிப்பிட்டு, அதில் மாண்புமிகு நீதியரசர் திரு. இதயதுல்லா அவர்களால் தலைமை வகிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் அமர்வு, உண்மையான உரிமையாளரைத் தவிர எவரும் எதிர்க்காத உடைமை சிறந்தது என்ற கோட்பாட்டை வலியுறுத்தியுள்ளது. **பாரி -எதிர்- கிளிஸ்சோல்டு, (1997) ஏ.சி. 73,** நீதியக் குழுவின் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடு பின்வரும் விளைவுக்கு 17-ஆம் பத்தியில் கவனிக்கத்தக்கதாகும்:

> "17. நம்முடைய தீர்ப்புரையில், நம்முடைய பிரச்சினைக்கு இது தவறான அணுகுமுறையை உள்ளடக்குகிறது. நமது கருத்தினை வெளிப்படுத்த, உண்மையான உரிமையாளரைத் தவிர எவரும் எதிர்க்காத உடைமை சிறந்தது என்ற கோட்பாடு எவ்வழியிலும் விலகி நிற்குமானால் அதனைக் கண்டறிய, நாம், 1907 ஏ.சி. 73-ஐ படிப்பதிலிருந்து தொடங்கலாம். 1907 ஏ.சி. 73 கோட்பாட்டை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு மீண்டும் உறுதி செய்துள்ளது:

"உரிமையாளர் என்று கருதப்படும் தன்மையில் நிலத்தின் உடைமையைக் கொண்டு, சாதாரண முறையில் உடைமை உரிமைகளை அமைதியான முறையில் செயலுறுத்திவரும் ஒரு நபர் பூரண உரிமையுள்ள உரிமையாளரைத் தவிர உலகிலுள்ள எவரும் எதிர்க்காத முழுநிறைவான நல்ல உரிமைமூலத்தைக் கொண்டிருக்கிறார் என்பது மறுத்துரைக்கப்பட இயலாது. மேலும், பூரண உரிமையுள்ள உரிமையாளர் வழக்கிற்கு பொருந்தத்தக்க காலவரையறைச் சட்டத்தின் வகையங்களின்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் சட்டமுறைப்படி அவரது உரிமைமூலத்தை உறுதிசெய்ய முன்வராவிட்டால், அவரது உரிமை எப்போதும் அற்றுப்போய்விடுகிறது மற்றும் உடைமை கொண்ட உரிமையாளர் முழுமையான உரிமைமூலத்தை அடைந்துவிடுகிறார்."

23. தீர்ப்புரையின் 22-ஆவது பத்தியில் இந்த அமர்வு, 1907 ஏ.சி. 73-இன் அகவுரையை அங்கீகரித்துள்ளது.

24. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் **அஜேந்திர பிரசாத்ஜி நரேந்திர பிரசாத்ஜி பாண்டே -எதிர்- சுவாமி கே. நாராயணன்தாஸ்ஜி மற்றும் பலர்,** *(2005) 10* ***எஸ்.சி.சி.*** *11*-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையையும் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்குவதற்கான ஒட்டுமொத்தக் காரணியை இந்நீதிமன்றம் விளக்கியுள்ளது. இவ்வழக்கு தெளிவாக வேறுபடுத்திக்காட்டத்தக்கது, மேலும், தற்போதைய வழக்கிற்கு பொருந்தத்தக்கதல்ல

என்பதாகும். மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட அடுத்த தீர்ப்புரை, **ஜெகதீஸ் பிரசாத் பட்டேல் (இறந்துவிட்டார்), சட்டப்படியான பிரதிநிதிகள் மூலமாக மற்றும் ஒருவர் -எதிர்- சிவனாத் மற்றும் பலர்,** *(2019) 6* **எஸ்.சி.சி.** *82* என்ற வழக்கில் உள்ளது. மேற்படி வழக்கில், உரிமைமூலம் மற்றும் உடைமை விளம்புகைக்கான உரிமை வழக்கில் இந்நீதிமன்றம், வாதிகளின் உரிமைமூலம் மற்றும் உடைமைக்கான உரிமை வழக்கில், பிரதிவாதிகள் தங்களின் வழக்கை மெய்ப்பித்திருந்தாலும், மெய்ப்பித்திருக்காவிட்டாலும் என்பதைப் பொருட்படுத்தாது. தங்களுக்குரிய உரிமைமூலத்தின் அடிப்படையில் வெற்றி பெறுவர் என்னும் கோட்பாட்டை வலியுறுத்தியுள்ளது. *44* மற்றும் *45*-ஆவது பத்திகளில் பின்வருமாறு வகுத்துரைக்கப்பட்டுள்ளது:

> *"44.* உரிமைமூலம் மற்றும் உடைமை விளம்புகைக்கான உரிமை வழக்கில் வாதிகள்-எதிர்மேல்முறையீட்டாளர்கள் தங்களுக்குரிய உறுதியான உரிமைமூலத்தின் அடிப்படையில்தான் வெற்றிபெற முடியுமேதவிர, பிரதிவாதிகள்-மேல்முறையீட்டாளர்களின் வழக்கின் பலவீனத்தின் அடிப்படையில் அல்ல. வாதிகள்-எதிர்மேல் முறையீட்டாளர்கள் விளம்புகைக்கான தீர்ப்பாணைக்குரியவர்கள் என்று காண்பிக்க வழக்குச் சொத்துகளில் தங்களது உரிமைமூலத்தை நிலைநாட்டும் பொறுப்பு அவர்கள்மீது உள்ளது. வாதிகள்-எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்ந்து நிற்கும் உரிமைமூல ஆவணமான பட்டா-குத்தகையை மேல்முறையீட்டாளர்கள்-எதிர்மேல்முறையீட்டாளர்கள்

முன்னிலைப்படுத்தவுமில்லை. வேறேதேனும் சான்றினைக்காட்டி தங்களது உரிமையை மெய்ப்பிக்கவுமில்லை. மேலேகண்டவாறு அவர்களால் சார்வுறப்பட்ட வருவாய் பதிவுக்குறிப்புகளும் உண்மையல்ல என்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. எந்நிகழ்விலும் ஒரு சில நில ஆவணங்களுக்கான வருவாய் பதிவுக்குறிப்புகள் உரிமைமூலத்திற்கான சான்றல்ல. அவை வருவாய்பொருட்டான சாதாரண விவரங்களே ஆகும். அவை, தரப்பினர்மீது உரிமைமூலத்தை மெய்ப்பிப்பதற்காக அவற்றைச் சார்ந்துநிற்கும் அவர்களின் உரிமையையோ, உரிமைமூலத்தையோ எதனையும் அளிக்காது.

45. உரிமைமூல விளம்புகைக்கான ஓர் உரிமை வழக்கில், பிரதிவாதிகள்-மேல்முறையீட்டாளர்கள் தங்களின் வழக்கை நிரூபித்துள்ளனரா? இல்லையா? என்பதைப் பொருட்படுத்தாது, வாதிகள்-எதிர்மேல்முறையீட்டாளர்கள் தங்களுக்குரிய உறுதியான உரிமைமூலத்தின் அடிப்படையில்தான் வெற்றிபெறவேண்டும் என்று யூனியன் ஆ∴ப் இந்தியா -எதிர்- வாசவி கோ. ஆ∴ப் உறவுசிங் சொசைட்டி லிமிடெட், *(2014) 2* எஸ்.சி.சி. *269* என்ற வழக்கில் கருத்துரைத்து கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது: *(எஸ்.சி.சி. பக்கம் 275, பத்தி 15).*

> *"15. உரிமைமூல விளம்புகைக்கான ஓர் உரிமை வழக்கில், அத்தகையதொரு விளம்புகை*

வழங்குவதற்கான தெளிவானதொரு வழக்கை மெய்ப்பித்து நிலைநாட்டும் சுமை எப்பொழுதும் வாதிமீதே உள்ளது என்பது சர்வசாதாரணமான சட்டமாகும், பிரதிவாதிகளால் தொடுக்கப்பட்ட வழக்கில் பலவீனம் ஏதுமிருப்பின், அது வாதிக்கு பரிகாரம் வழங்கும் ஒரு காரணமாக இருக்காது.""

25. மேற்படி வழக்குகளில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட அறுதியுரைக்கு மறுப்பேதுமில்லை. ஆனால், தற்போதைய வழக்கின் சங்கதிகளுக்கு வருகையில், இம்மேல்முறையீட்டுக்கு வழிவகுத்த தற்போதைய உரிமை வழக்கு, உரிமைமூலம் மற்றும் உடைமை விளம்புகைக்கான உரிமை வழக்கல்ல. சரியாக சொல்லவேண்டுமென்றால், இந்த உரிமை வழக்கு உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்யப்பட்டதாகும். மேலேகுறிப்பிட்டவாறு *1*-ஆம் பிரதிவாதியின் வேண்டுகோளின்படி, தொடரப்பட்ட முந்தைய வழக்கில் அவர் ஒரே சொத்தின் உடைமை மீளப்பெறுதல் மற்றும் விளம்புகைக்கான உரிமை வழக்கில் தோல்வி அடைந்துவிட்டார் என்பதைக் குறிப்பாக கருத்திற்கொண்டு, தற்போதைய வழக்கின் சங்கதிகளில் வாதியின் உரிமைமூலத்தை ஏற்காமல், உறுத்துக்கட்டளைக்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு நிலைக்கத்தக்கது என்று தீர்மானிப்பதற்காக உயர் நீதிமன்றம் நம்பத்தக்க காரணங்களைக் கூறியுள்ளது. பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட சான்று ஆராயப்படவில்லை என்ற மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதம் சரியல்ல. விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் வாய்மொழி சான்றினை மட்டுமல்லாது *13* மற்றும் *16*-ஆவது பத்திகளில் உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட

விவாதத்திலிருந்து தெளிவாக உள்ள, பிரதிவாதியின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் ஆராய்ந்தன.

26. சான்றாவணங்களான வா.சா.ஆ.*1* மற்றும் வா.சா.ஆ.*2*-இன் செல்லுந்தன்மையை ஏற்பது அவசியமில்லை என்றும், வாதியால் தாக்கல் செய்யப்பட்ட உறுத்துக்கட்டளைக்கான உரிமை வழக்கு, வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டதும், நிலைநாட்டப்பட்டதுமான உடைமையின் அடிப்படையில் தீர்ப்பாணையிடப்படுவதற்குரியது என்றுமான உயர் நீதிமன்றத்தின் கருத்தில் நாங்கள் தவறேதும் காணவில்லை. இவ்வாறு நாங்கள் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவுசெய்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை மீட்டளிக்கிறோம், மேலும், வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டை அனுமதிக்கும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் பிழையேதும் காணவில்லை.

27. முடிவில், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்
மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி
மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

புது தில்லி,
08.02.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."